Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online)
Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# Social Conditions in Ashokamitran's Novels

**Dr. V. Karthik**

(Guide) Assistant Professor, Department of Tamil Liretature, Annamalai University, Annamalainagar.

**P. Balavignesh**

Ph.D. Research Scholar, Department of Tamil Literature, Annamalai University, Annamalainagar.

## Abstract:

In ancient times, humans, wandering as nomads, formed communities to fulfill their life's needs. Ashokamitran is one of the writers who portrays both present and past societies through narratives in his novels. In his novel "Water," he discusses water scarcity, and through "Water Lily of the Sky," he depicts poverty. Both of these constitute problems within society. Therefore, this article attempts to analyze these issues. The article progresses under the headings: Society and Human Life, Societal Functioning, Poverty in Society, Plight of Women, and Humanitarian Sentiment. Furthermore, the objective of this article is to understand how Ashokamitran approached and presented the problems that have existed in society from then until now through these themes.

**Keywords**: Novels such as Water and Water Lily of the Sky, and the societal issues addressed in those novels, including Society and Human Life, Societal Functioning, Poverty in Society, Plight of Women, and Humanitarian Sentiment.

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online)
Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# அசோகமித்ரன் நாவல்களில் சமுதாய நிலை

**முனைவர் வை. கார்த்திக்**,
(நெறியாளர்) உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

**பி. பாலவிக்னேஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டையக் காலத்தில் நாடோடியாக அலைந்து திரிந்த மனிதன் தன் வாழ்வின் தேவைக்காக உருவாக்கிய கூட்டமைப்பு சமுதாயமாகும். நிகழ்காலச் சமுதாயத்தையும், கடந்தகாலச் சமுதாயத்தையும் கதைப்போக்கில் நாவல்களாக வெளிப்படுத்தி வருபவர்களில் அசோகமித்திரனும் ஒருவர். அவர் 'தண்ணீர்' என்ற நாவலின் மூலம் தண்ணீர் தட்டுப்பாடுகளையும், 'ஆகாயதாமரை' எனும் நாவலின் மூலம் வறுமையையும் கூறுகிறார். இவை இரண்டும் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகள். எனவே அந்த செய்தியை ஆராயமுற்படுகின்றது இக்கட்டுரை. இதில் சமுதாயமும் மனித வாழ்வும், சமுதாய செயல்பாடு, சமூகத்தில் வறுமை, பெண்களின் அவலநிலை, மனிதநேய உணர்வு என்ற தலைப்புகளில் இக்கட்டுரை நகர்கின்றது. மேலும் இந்த தலைப்புகளின் மூலம் சமுதாயத்தில் அன்று முதல் இன்று வரை இருக்கக்கூடிய பிரச்சனைகளை அசோகமித்ரன் எவ்வாறு எடுத்து அணுகியுள்ளார் என்பதையும் நாம் அறிந்துகொள்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

தண்ணீர் மற்றும் ஆகாயதாமரை போன்ற நாவல்களும், அந்த நாவல்களில் எடுத்துக்கொண்ட சமுதாயமும் மனித வாழ்வும், சமுதாய

செயல்பாடு, சமூகத்தில் வறுமை, பெண்களின் அவலநிலை, மனிதநேய உணர்வு ஆகிய பிரச்சனைகள்.

**முன்னுரை**

நாவல் இலக்கியம் சிறுகதையை விட சமுதாய பிரச்சனையை முழுமையாக பிரதிபலிக்கும் இலக்கிய வகையாகும். அந்த இலக்கியத்தின் மூலம் சமுதாயத்தில் நடக்கக்கூடிய பிரச்சனைகளை வெளிகொண்டுவந்த ஆசிரியர்களில் அசோகமித்ரனும் ஒருவர் ஆவார். இவரது தண்ணீர் என்ற நாவலின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களிடம் பெரியோர்களின் ஆதிக்க தன்மை மற்றும் தண்ணீர் தட்டுப்பாடுகளால் அவர்களுக்குள் தோன்றும் மாற்றங்களையும், வறுமைகளையும் எவ்வாறு மக்கள் கையாளுகிறார்கள் என்பதை அவரது நாவல்களின் மூலம் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**சமுதாயமும் மனித வாழ்வும்**

சில பொதுவான விழுமியங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டு வினையாற்றி கொள்ளும் தன்னிறைவுடைய நிலையான மிகப்பெரிய மக்கள் குழுவே சமுதாயம் எனப்படும். இச்சமுதாயத்தை பற்றியும் சமுதாயத்தின் நடவடிக்கை பற்றியும் பல்வேறு கோணங்களில் ஆராயும் துறைகள் சமூக அறிவியல் துறைகள் எனப்படுகின்றன “சமுதாயம் இன்றி இலக்கியம் இல்லை” என்பதால் இலக்கியத்தின் மையமாக அமைந்திருப்பது சமுதாய நிகழ்வுகளே என்பது தெளிவாகும்.

> “மனிதன் சுதந்திரமானவனாக இருந்தாலும் பிறப்பிலும் பிறந்த பின்னர் சமுதாயத்துடன் இணையும் போதும் சமூகம் அவனை போன்ற எண்ணற்ற தனிமனிதர்களின் சக்திகளை கொண்டு ஒரு சில காரியங்களை சாதிக்க முற்படும் போதும், அவனே தன்னகத்தே ஏற்று தனது கூட்டு திட்டங்களுக்கு உள்ளாக

> ஆட்படுத்துவதன் மூலம் தனிமனிதன் சமூகம் என்னும் கூட்டமைப்பில் ஒன்றுகின்றன“ (இ.ச.ப. 19)

என்னும் இ.சி. மறைமலையின் கருத்து சமுதாயத்தோடு மனிதன் இணைந்து செயலாற்ற வேண்டிய நிலை இருப்பதை காட்சிப்படுத்துகிறது.

சமுதாயத்தின் ஆற்றலில் சக்தியில் தோய்வு ஏற்படும் போது அது தனிமனித வாழ்க்கையை பாதிக்கின்றது. சமுதாய சக்தியானது சமுதாய உறுப்புகள் முழுமைக்கும் சமசீரான இரத்த ஓட்டத்தை வழங்க வேண்டும் அதில் பாதிப்பு ஏற்படும் போது தனிமனித பங்களிப்பு பாதிப்புக்கு உள்ளாகிறது.

**சமுதாயச் செயல்பாடுகள்**

மக்கள் திரளே சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. ஆதலால் சமுதாயம் என்பது மக்கள் அனைவரின் பழக்கவழக்கங்கள், நடத்தைகள், வாழ்வியல் வழக்காறுகள் முதலானவற்றையும் குறிக்கும் சொல்லாக்கமாக இருப்பது தெளிவாகிறது. இதனால் மக்களிடம் நிறைந்துள்ள சமூகத்தை அழிக்கும் காரணிகளை முதலில் காட்டுவதும், இச்சீர்கேடுகளால் சமூகம் எந்த அளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாகிறது என்பதனை காட்டி அதனை களைய முற்படுவதும் படைப்பாளியின் படைப்ப கொள்கையாக அமைந்திருப்பது தெளிவாகிறது.

**சமுதாயத்தில் வறுமை**

சமுதாயத்தில் வறுமை கொடிய நோய்போல் பரவியுள்ளது. அவ்வறுமை தனிமனிதனை மட்டும் தாக்குவதில்லை, சமுதாயத்தையே தாக்குகிறது வறுமையால் மக்களினம் நலிவுற்று கிடப்பதனையே இலக்கியங்கள் காலம் காலமாக பதிவு செய்து வந்துள்ளன.

வறுமை இன்று நேற்றல்ல; தொன்றுத் தொட்டே சமூகத்தைப் பெரிதும் பாதித்து வருகிறது. அவ்வகையில் இலக்கியத்தின் வழி வரம்புகளை மீறி மனித உறவுசிக்கலாக வறுமை திகழ்கிறது.

சமுதாயத்தில் உருவாகும் பல்வேறுப்பட்ட சீர்கேடுகளுக்கு வித்திடுவது வறுமையே எனலாம். இச்சீர்கேடுகளை முறையிடுவதற்கு காரணம் சமுதாயமே அதனை ஆக்கிரமித்து கொண்டிருக்கும் ஆக்க சக்திகளே.

'ஆகாயத்தாமரை' எனும் நாவலில் வசதியானவர்கள் மட்டும் தான் விடுதியில் சேர முடியும் என்ற செய்தியை,

> "மாதம் சுமார் ரூபாய் ஐயாயிரமாவது சம்பாதிப்பவர்கள் தான் அந்த விடுதியை தாக்குபிடிக்க முடியும். ஆனால் இருநூறு ரூபாய்க்கு தாளம் போடும் ரகுநாதன் போன்றவர்களுக்கு அம்மாதிரி விடுதிகள் இருப்பதுகூட தெரியாமல் போவதுதான் நல்லது" (ஆகாயத் தாமரை நாவல், ப. 51)

> "ரகுநாதனுக்குப் பெரியதாக நான்கு கற்களை தூக்கி அந்த விடுதியை நோக்கி கல்லெறிய வேண்டும் போலிருந்தது. சிறு பிள்ளை தனமாக இருந்தாலும் அவனுக்கு அப்படி தோன்ற அவனுடைய இயலாமையே காரணம்" (ஆகாயதாமரை நாவல், ப. 51)

அசோகமித்ரன் ஆகாயத்தாமரை என்ற நாவலின் மூலம் எவ்வாறு வறுமையினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அழகாக சுட்டிக்காட்டியுள்ளார்.

**பெண்களின் அவலநிலை**

பெண்ணின் இயல்புகளைப் பெற்றிருப்பது பெண்மையாகும். பெண்ணைப் பற்றிய கொள்கை அல்லது கோட்பாட்டை குறிப்பது பெண்ணியமாகும். சமுதாயம் காலந்தோறும் பெண்களுக்கு கொடுத்திருந்த இடத்தையும் விதித்திருந்த கட்டுப்பாடுகளையம் அடிமைதனத்திலிருந்து பெண்கள் விடுதலை பெறவும் சமஉரிமை பெறவம் தோன்றியதே பெண்ணியமாகும். ஆங்கிலத்தில் பெமினிசம் என்ற சொல் பெண்களை பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானமாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம் என கூறப்படுகிறது.

உரிமை என்பது தனிமனிதனின் அடையாளம். இந்நாட்டில் மனிதர்கள் ஆண் பெண் என்ற பாகுபாட்டை பார்ப்பதினால் ஆண்களுக்கான உரிமைகள் வேறு எனவும் பெண்களுக்கான உரிமைகள் வேறு என்வும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய உரிமைகள் மனிதர்களுக்கு இடையே இனம். சாதி, சமயம், வயது, உடல் என அனைத்திலும் காணப்படுகிறது. சமநிலை என்ற உணர்வு மனிதர்களுக்கு இருந்தால் பெண்களுக்கான உரிமைகள் பெண்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாக வாழ்வார்கள். ஆனால் பெண்கள் வாழ்வில் அக்காலத்தில் இருந்தே வளர்ந்த முறையும் வாழ்ந்த முறையும் கட்டுப்பாடுகளும் பெண்கள் முன்னேறுவதற்கு எந்த ஒருசூழ்நிலையும் அமையவில்லை. பெண்கள் முன்னேற்றங்களுக்கு ஒரு சில ஆண்கள் தடையாக அமையும் செய்தியை,

> “நீ அந்த பாஸ்கர் ராவ் உன்னை பெரிய ஹீரோயினா பண்ணிடப்போறான்னு அவன் பின்னாலே ஓடின கல்யாணம் ஆனவன நம்பி எவளாவது ஓடுவாளா?” (தண்ணீர் நாவல், ப. 12)

இதுபோன்று பெண்கள் முன்னேற்றத்தில் ஏற்படும் தடைகளையும் இந்த தண்ணீர் என்ற புதினத்தின் வழி காட்டியுள்ளார்.

**மனிதநேய உணர்வு**

மனிதன் தன்னையொத்த பிற மனிதர்களை நேசிப்பதும், தன்னைவிட கீழ்நிலையில் உள்ள விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் தொல்லை தராது இருப்பதும் ஆன்மநேயத்தின் மகத்துவமாக கருதப்படுகின்றது. மனிதன் தன்னையொத்த மனிதர்களிடம் நேசம் கொள்வதை தண்ணீர் நாவலில் இடம்பெறும் டீச்சரம்மாவின் செயல்பாட்டின் மூலம் புலப்படுத்துகின்றனர். டீச்சர் தண்ணீர் எடுக்க ஒருவன் செல்லும்போது அது கனமாக இருக்கும். நானும் உதவ வரட்டுமா என்று கேட்ட செய்தியை,

> "நான் வரட்டுமா? ஒரு கை பிடிக்கட்டுமா ஜமுனா? என்று டீச்சரம்மா கேட்டாள்" (தண்ணீர் நாவல், ப. 45)

இவ்வாறு சமூகத்தில் அன்று முதல் இன்று வரை ஒரு சிலரிடம் மனிதநேயம் இருந்து கொண்டுதான் உள்ளது என்பதை அசோகமித்திரன் இந்த செய்தயின் மூலம் அழகுற எடுத்துக்காட்டுகிறார்.

**முடிவுரை**

படைப்பாளிகள் சமுதாய பொறுப்புடையவர்களாக கருதப்படுகின்றனர். அசோகமித்ரன் தனது நாவல்களில் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளை அதிகமாகப் பேசியுள்ளார். அவ்வகையில் தண்ணீர், ஆகாயதாமரை ஆகிய நாவல்களில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளும், மனிதநேயமும், தண்ணீர் தட்டுப்பாடு, வறுமை போன்ற சமுதாய சிக்கல்களைப் பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது. இதன் மூலம் அசோகமித்ரன் நாவல்கள் சமுதாய சிக்கல்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கின்றது.

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதாரம்**

அசோகமித்ரன். **தண்ணீர்,** கலைஞன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1973

அசோகமித்ரன். **ஆகாயத்தாமரை,** கலைஞன் பதிப்பு (அ), காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு-1980

**துணைமை ஆதாரம்**

மறைமலை. சி.இ., இலக்கியமும் சமூகவியலும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1991

**References**

Ashokamithra. Water, Kalaignan Publishing House, Chennai, First Edition-1973

Ashokamithra. Agayathamarai, Kalaignan Edition (A), Kalachuvadu Publications, First Edition-1980

Maraimalai. C.E., Literature and Sociology, Manivasagar Publishing House, Chennai, First Edition-1991